# தமிழ்நாடு

## இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு

## அறிக்கை

1985

குழு உறுப்பினர்களால் தயாரித்து அளிக்கப்பட்ட
பரிந்துரைகள்

# குழு உறுப்பினர்களால் தயாரித்து அளிக்கப்பட்ட பரிந்துரைகள்

பொருளடக்கம்


| | |
|---|---|
| | பக்கங்கள் |
| குழு உறுப்பினர்களால் தயாரித்து அளிக்கப்பட்ட பரிந்துரைகள் | 1—9 |
| இரண்டாம் பிற்படுத்தப்பட்ட வகுப்பு குழுவினால் பரிந்துரைக்கப் பட்ட தமிழ்நாடு மாநிலம் முழுவதிலும் உள்ள பின்தங்கிய வகுப்பினர் பட்டியல். | 9—17 |

## தமிழ்நாடு இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு

## 1985

## குழு உறுப்பினர்களால் தயாரித்து அளிக்கப்பட்ட பரிந்துரைகள்

தலைவர் உட்பட 21 உறுப்பினர்களைக் கொண்டு, தமிழ்நாடு இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு அரசால் அமைக்கப்பட்டுள்ளது. குழு அமைக்கப்பட்ட அரசாணையின்படி, பிற உறுப்பினர்களுக்கு இல்லாத, தனியான, உயர்ந்த தகுதி நிலை எதுவும் குழுத் தலைவருக்கு குறிப்பிட முடியாது. குழுத் தலைவர் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், பெரும்பான்மை உறுப்பினர்களின் கருத்தே குழுவின் கருத்தாக எடுத்துக்கொள்ளப்படும் என்று வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழுவில், ஏறத்தாழ எல்லா உறுப்பினர்களும், மக்களின் பிற்பட்ட நிலையை நிர்ணயிக்கும் மிக முக்கிய எல்லா பிரச்சினைகளிலும் ஒரே கருத்தைக் கொண்டுள்ளனர்; குழுத் தலைவர் தனிப்பட்ட வேறொரு கருத்தினைக் கொண்டுள்ளார். ஆனால் துரதிருஷ்டவசமாக குழுத் தலைவர் தன் சொந்தக் கருத்துக்களையே நிலை நாட்ட முயலுவதுடன், அவைகளையே குழுவின் கருத்துக்களாகக் காட்டவும் முற்படுகிறார். பிற உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை தன்னுடைய அறிக்கைக்கு ஒரு மாறுபட்டக் குறிப்பாகத்தான் பதிவு செய்யலாம் என்று கூறினார். குழுவின் இறுதிகட்ட நேரத்தில்தான் குழுத் தலைவர் தன்னுடைய உண்மையான இயல்பினைக் காட்டியுள்ளார். பல மாதங்களுக்கு முன்பே அவருக்கு கிடைத்த ஆய்வு முடிவுகள் குறித்து உறுப்பினர்களை அவர் நம்பவில்லை. குழு உறுப்பினர்களின் பெரும்பான்மைக் கருத்தையே குழுவின் கருத்தாக அறிக்கையில் சேர்க்கப் போவதாக அவர் உறுப்பினர்களைத் தவறாக நம்பச் செய்தார். ஆய்வுகளின் முடிவுகளை செயற்படுத்துவது குறித்து உறுப்பினர்களுக்கு பிப்ரவரி மாதம் மூன்றாம் வாரத்தில் தான் தெரிவிக்கப்பட்டது. இதனால், உறுப்பினர்கள் தங்கள் பணியினைச் சரிவரச் செய்ய இயலாமற் போயிற்று. உறுப்பினர்களில் பெரும்பாலோர், பிற்பட்ட வகுப்பினர் பிரச்சினைகள் குறித்து களச் சிறப்பறிவுத் திறமும், பரந்த அனுபவமும் கொண்ட நன்கு விபரமறிந்த, மதிப்புப் பெற்ற அரசியல்வாதிகள் பெரும்பாலோர் கருத்து அறிந்து, அறிக்கையினைத் தயாரிக்க கொள்கை அடிப்படை குறித்து உறுப்பினர்களுடன் முன்னதாக விவாதிக்காது குழுத் தலைவர் தனது அறிக்கையினைத் தயாரித்து, அதில் உறுப்பினர்க்ள் கோடிட்ட இடங்களில் கையெழுத்திட வேண்டுமென்று வலியுறுத்தினார். குதிரைக்கு முன் வண்டியை அமைப்பது போன்று ஒழுங்கு முறையைத் தலை கீழாக்கும் குழுத் தலைவரின் போக்கினை, உறுப்பினர்கள் தற்போது தெரிந்து கொண்டனர். கணக்கெடுப்பு முடிவு ஆய்வுகளில் நிறையத் தவறுகள், முரண்பாடுகள், பற்றாமை மற்றும் சூழ்ச்சித் திறனுடன் கையாளப்பட்டமை உறுப்பினர்கட்குக் கிடைத்த குறுகிய கால அளவில் கண்டுபிடிக்கப்பட்டன. தங்களிடம் உள்ள விவரங்களின் அடிப்படையில், உறுப்பினர்கள் ஒன்றாகச் சேர்ந்து, இந்த அறிக்கையினை குழுவின் பரிந்துரைகளுடன் கூடிய அறிக்கையாகக் கொண்டு வந்துள்ளனர். இப்பரிந்துரைகளுக்கு அலுவலக சார்புள்ள உறுப்பினர்களும் இசைவு தெரிவித்துள்ளனர். ஆய்வுப் பொருள்கள் குறித்து, போதுமான ஆதார பூர்வமான தகவல்கள் அரசிடம் உள்ளன என்பதை நாங்கள் அறிவோம். குழு, எல்லா மாவட்டத் தலைமையிடங்கட்கும் பயணம் செய்து, விசாரணைக்குத் தொடர்பான சான்றாக, ஏராளமான, மதிப்புள்ள விவரங்களைச் சேகரித்துள்ளது. குழுவின் வினாப் பட்டியலுக்கு, ஆயிரக் கணக்கான தனி நபர்களும், சமூக சங்கங்களும் பதில் அளித்துள்ளனர். பொது மக்கள் அளித்த சாட்சியம் ஆயிரக் கணக்கான பக்கங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இப்பொருள் குறித்து, சட்ட வல்லுநர்கள் உட்பட பல வல்லுநர்களின் கருத்தையும் குழு கோரிப் பெற்றுள்ளது. ஆனால், துரதிருஷ்டவசமாக குழுத் தலைவர், குழுவினால் சேகரிக்கப்பட்ட ஏராளமான புள்ளி விவரங்களைப் புறக்கணித்ததுடன். வேண்டுமென்றே இது தொடர்பாக அவர் கவனம் செலுத்தவும் தவறிவிட்டார். மக்கட் தொகையில் பிற்பட்ட நிலையினை மதிப்பிட சமூக மற்றும் கல்வி ஆய்வு முடிவுகளே முதலும் முக்கியமானதுமான அளவுகோலாக அவர் எடுத்துக் கொண்டுள்ளார். குழுவின் பல்வேறு ஆய்வுகளின் முடிவுகளின் சரியின்மை, பற்றாமை, நம்பகமின்மை குறித்து நாங்கள் தற்போது விவாதித்து உள்ளோம். பல்வேறு வகுப்பினரின் சாதி வாரியான மக்கட் தொகை எண்ணிக்கை விவரங்கள் உறுப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இவ்விவரங்களின் வழுவின்மை குறித்து நெடு நாட்களுக்கு முன்பே வாய்மொழியாக உறுப்பினர்கள் ஐயம் தெரிவித்துள்ளனர். கிறிஸ்துவ மக்களின் எண்ணிக்கை குறித்து 1-12-1984 அன்றே ஒரு உறுப்பினர் வாதிட்டார். முதற்கட்ட ஆய்வின் அட்டவணைகள், உறுப்பினர்களுக்கு, அவர்கள் பொதுத் தேர்தல் பணிகளில் மும்முரமாக ஈடுபட்டிருந்த நேரத்தில் அதாவது 1984 நவம்பரில்தான் தரப்பட்டன. புத்தாண்டு (1985) ஆரம்பத்தில்தான், மாவட்ட அளவில் தரப்பட்ட பல்வேறு புள்ளி விவரங்கள் சரியானவைதானா? என்று உறுப்பினர்கள் சரிபார்க்க முயன்றனர். முதற்கட்ட ஆய்வில் 100 சதவீதம் குடும்பப் பட்டியல் சரிபார்க்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. எல்லாவகைக் கிறித்துவர்களும், 14 தலைப்புகளில் வகைப்படுத்தப்பட்டு, தனித்தனி குறியீட்டெண்கள் தரப்பட்டு, அவர்களது மக்கள் தொகை விவரங்கள் சேகரிக்கப்பட்டன. இவ்வாறு செய்யப்பட்ட 100 சதவீத கணக்கெடுப்பின்படி, மொத்த கிறித்துவ மக்கட் தொகை சுமார் 22 இலட்சம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இது 1971 ஆம் ஆண்டு மக்கட் கணக்கெடுப்பின்படி

தமிழ்நாட்டில் உள்ள கிறித்துவர் மக்கட் தொகையைவிட 2 இலட்சம் குறைவானதாகும். முதற்கட்ட ஆய்வின்படி கணக்கிடப்பட்டக் கிறித்துவ மக்கட் தொகை சரியானதாக இல்லை என்று வாதிட்டப்பட்டபோது, இரண்டாவது கட்ட ஆய்வில் சரிபார்க்கப்பட்டு, கிறித்துவ மக்கட் தொகை 29.21 இலட்சம் என்று கண்டுபிடிக்கப்பட்டது. இந்த 7 இலட்ச வேறுபாடு, வேறு சமூகம் அல்லது இனத்தாரின் மக்கட் தொகையிலிருந்து கழிக்கப்படவில்லை. இத்தவறு கணக்கிடப்பட்ட பல்வேறு சமூக மற்றும் கல்வி அளவீட்டு முடிவுகளைப் பெரிதும் பாதித்திருக்கும். இன்னொரு முறைகேடு. பிற்படுத்தப்பட்ட வகுப்பினரிலிருந்து கிறித்துவர்களாக மாறியவர்களின் மக்கட்தொகை பற்றியதாகும். 100 சதவீத முதற்கட்ட ஆய்வில் அவர்கட்கு குறியீட்டெண் 9 தரப்பட்டு. அவர்களது மக்கட் தொகை 4,85,027 என்று கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் இரண்டாவது கட்ட ஆய்வின்படி, கிறித்துவ நாடார்களின் மக்கட் தொகை மட்டுமே 9,48,500 என்று கணக்கிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள கிறித்துவர்களில் கிட்டதட்ட 50 சதவீதத்தினர், ஆதி திராவிடர் வகுப்பினரிலிருந்து மதம் மாறியவர்கள் என்பது பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. கிறித்துவ பிரதிநிதிகள், ஆதி திராவிடக் கிறித்துவர்களின் எண்ணிக்கை 17 இலட்சம் என்று உரிமை கோருகின்றனர். ஆனால், முதற்கட்ட ஆய்வின்படி, அவர்களது எண்ணிக்கை 6.34 இலட்சம் மட்டுமே. இங்கும் இம்முக்கிய முரண்பாடு, குழுவால் கணக்கிடப்பட்ட கல்வி ஆய்வு அளவீடுகளைப் பாதித்திருக்கும் சௌராஷ்ட்ரா, பார்க்கவகுலம், வலையர், முஸ்லீம், முத்துராஜா, யாதவர், அகமுடையார் மற்றும் பல வகுப்பினரின் மக்கட் தொகை எண்ணிக்கையும் சரியானதல்ல என்று குழு உறுப்பினர்கள் குறை கூறுகின்றனர்.

## இரண்டாவது கட்ட மாதிரி ஆய்வில் சேகரிக்கப்பட்ட விவரங்களைப் பயன்படுத்துதல் குறித்து.

முதற்கட்ட ஆய்வில் சேகரிக்கப்பட்ட மக்கட் தொகை மற்றும் இதர விவரங்கள் நம்பகமானவை அல்ல என்றும், ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை என்றும் ஏற்கனவே சுட்டிக் காட்டியுள்ளோம். சில பெரிய இனத்தாரின் மக்கட் தொகையில், அளவுக்கு மேற்பட்ட மற்றும் நம்ப முடியாத அளவு மக்கட் தொகைப் பெருக்கம் காணப்படுகிறது. வேறு சில வகுப்பினரைப் பொறுத்த அளவில், நம்ப முடியாத அளவு மக்கட் தொகை குறைவு காணப்படுகிறது. வகுப்புவாரியாக மக்கட் தொகை புள்ளி விவரங்களை, நெடுநாட்களுக்கு உறுப்பினர்களுக்கு குழுத் தலைவர் தரவில்லை. பல முறை வற்புறுத்திய பிறகுதான், அதுவும் குழுவின் கால வரம்பு கிட்டத்தட்ட முடியும் கட்டத்தில், அதாவது 1984 நவம்பரில் தான் அவ்விவரங்கள் உறுப்பினர்களுக்குத் தரப்பட்டன. இதன் விளைவாக, உறுப்பினர்கள், தங்கள் சொந்த அனுபவம், தகவல் மூலமாகவோ, அல்லது தங்கள் முகவர் மூலமாகவோ, இவ்விவரங்களைச் சரிபார்க்கும் வாய்ப்பினை உறுப்பினர்கள் இழந்தனர். இரண்டாவது கட்ட ஆய்வு, புள்ளிவிவரச் சட்டப்படி, அறிவியல் பூர்வமாகச் செய்யப்படவில்லை. பல வகையினர்/இனத்தினர் குறித்த கணக்கெடுப்பும், ஆய்வும் தேவைப்பட்டும், தொடர்பு இல்லாத ஆய்வு முறையே பின்பற்றப்பட்டது. மொத்தமுள்ள ஒரு கோடி குடும்பங்களில் ஒரு சதவீதப் பிரதிநிதித்துவமான ஒரு இலட்சம் குடும்பங்களில் ஆய்வு செய்து விவரங்கள் சேகரிக்கப்பட்டிருக்கவேண்டும். மக்கட் தொகை குறைவாக உள்ளவர்களும், மாநிலத்தில் உள்ள பல கிராமங்களில் சிறு அளவில் உள்ளவர்களுமான சிறு வகுப்பினர், ஆய்வுக்குப் போதுமான பிரதிநிதித்துவம் தர இயலவில்லை. ஆய்வில் இடம் பெறுவதிலோ அல்லது பிரதிநிதித்துவம் செய்வதிலோ 0.25 சதவீதம் கூட கிடைக்க இயலாமற் போன வகுப்பினரும் உள்ளனர். இவ்வாறு குறைபாடான, நிறைவுறாத ஆய்வில் சேகரிக்கப்பட்ட விவரங்களை ஏற்பது, தவறான முடிவுகளுக்கு வழி கோலும். எனவே. இவ்வாறு இரண்டாவது கட்ட ஆய்வு மூலம் சேகரிக்கப்பட்ட குறைபாடுள்ள நிறைவுறாத விவரங்களை, குழு மாவட்டத் தலைமையிடங்களின் அமர்வுகளின்போதும், கிராமங்களுக்குச் சென்றிருந்தபோதும் பெறப்பட்ட காரணக் கூறுகள் மற்றும் சாட்சியங்களுடன் சரிபார்க்காது, அடிப்படையாக எடுத்துக் கொள்வது சரியான முறையல்ல என்று கருதுகிறோம். வெறும் புள்ளிவிவரங்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு, சில வகுப்பினரைப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலிலிருந்து நீக்கிவிடலாம் என்னும் குழுத் தலைவரின் பரிந்துரை ஏற்கக் கூடியதல்ல. எனவே அவர்களுடைய மக்கட் தொகை 100 சதவீதம் சரிபார்க்கப்பட்டு அவர்களுடைய சமூக கல்வி நிலைகள் அரசால் ஒப்புக்கொள்ளப்படும் வரை, தற்போது உள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியல் தொடர்ந்து செயலில் இருக்க வேண்டும் என்றும், இப்பட்டியலிலிருந்து எந்த ஒரு வகுப்பினரையும் நீக்கம் செய்யக் கூடாது என்றும் நாங்கள் அரசைக் கேட்டுக் கொள்கிறோம். அதே போல் சரிபார்க்காது எந்த ஒரு முற்பட்ட வகுப்பினரையும் இப்பட்டியலிலிருந்து சேர்க்கவும் கூடாது என்றும் நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

### (1) சமூக ரீதியில் பிற்பட்ட நிலை :

சமூக ரீதியில் பிற்பட்ட நிலை, நெடுங்காலமாக, சமூக அடுக்கமைப்பு, நெடிய வரலாறு மரபு வழி அடிப்படை மற்றும் இன்றியமையா உரிமைகள் காலங்காலமாக மறுப்பு இவைகளின் விளைவாகும். பல இனத்தார். அவர்கள் மரபு வழி செய்து

வந்த தொழில்கள் தூய்மைக் கேடானது என்றும் கால சமுதாய அமைப்பில் தாழ்ந்தவை என்றும் கருதப்பட்டன. பல வகுப்புகள் சமுதாயத்தால், தாழ்ந்தவை என்றும், சமூக ரீதியில் பிற்பட்டவை என்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, இவ்வகுப்பினர், ஆதிக்கம் பெற்ற வகுப்பினரின் அடக்குமுறைக்கு ஆட்பட்டு தொடர்ந்து துயருற்றனர் மரபு வழித் தொழில்களாகிய துப்புரவு செய்தல், முடி திருத்துதல், சலவை செய்தல், பாளை உரித்தல், மீன் பிடித்தல், தோலுரித்தல், கல் உடைத்தல் முதலியன, தூய்மை யற்றதாகவும், தரக் குறைவானதாகவும் சமுதாயத்தால் கருதப்பட்டு, இத்தொழில் களைச் செய்பவர்கள், ஆதி திராவிடர் போல நடத்தப்படுகின்றனர். இந்துக்கள் அல்லாத பிற மதங்களில். பல வகுப்பினர் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்தவர் களாக பல மாநில அரசுகளால் குறித்துக் காட்டப்பட்டுள்ளனர். சமூக ரீதியில் பிற் பட்ட நிலையில் உள்ளவர்கள் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளனர் என்ற அடிப்படை யில் பின் தங்கிய வகுப்பினர் பட்டியலில் அரசால் சேர்க்கப்பட்டுள்ள இந்துக்கள் அல்லாத பிற மதங்களைச் சேர்ந்த எல்லா வகுப்பினருக்கும் 3 புள்ளிகள் கொடுத்து விட்டு, பிற மதங்களுக்கு மாறிய ஏனைய பிற்பட்ட வகுப்பினருக்கு புள்ளிகள் தர மறுத்திருப்பது நியாயமானது அல்ல. பிற்பட்ட வகுப்பினர் மற்றும் அவ்வகுப்பினரில் மதம் மாறியவர்கள் எல்லோரையும் ஒரே வகுப்பாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும், மத அடிப்படையில் அவர்களுக்கு இடையே வேறுபாடு காட்டக்கூடாது என்றும் குழு உறுப்பினர்கள் ஒரு மனதாக கருத்துத் தெரிவித்துள்ளனர். உடல் உழைப்புத் தொழில்/பெண்கள் வேலை செய்வது/சிறுவர்கள் வேலை செய்வது சமுதாயத்தில் சமூக ரீதியில் பிற்பட்ட நிலை மக்கு வழி கோலுகிறது.

சமூக ரீதியில் பிற்பட்ட நிலைக்கு மட்டுமே, வறுமை ஒரு அளவீடு ஆகாது. வறுமை, சமூக ரீதியில் பிற்பட்ட நிலைமை கல்வி ரீதியில் பிற்பட்ட நிலைமை இரண்டுக் குமே வழி வகுக்கும். எனவே மண்டல் குழு செய்திருப்பதுபோல, சமூக ரீதியில் பிற்பட்ட நிலை, கல்வி ரீதியில் பிற்பட்ட நிலை, வறுமை ஆகிய மூன்று தலைப்புகளின் கீழும், குறியீடுகளுக்கு கூடுதல் மதிப்ப தரப்படவேண்டும்.

## (2) கல்வி ரீதியில் பிற்பட்ட நிலை :

கல்வி ரீதியில் பிற்பட்ட நிலையினைத் தீர்மானிக்க, பின்பற்றத்தக்க வழி முறைகள் அல்லது அளவுகோல்கள் எவையையும் எந்த நீதிமன்றமும் குறிப்பிட வில்லை. கல்வி ரீதியில் பின்தங்கிய நிலையினை மதிப்பிட 10-வது வகுப்பு வரை இனத்தாரின் செயலாக்கம், மேல் நிலைப் பள்ளிப்படிப்பு, பள்ளியிலிருந்து நின்று விடுதல் கல்லாமை ஆகிய மூன்று தலைப்புகளின் கீழ் புள்ளிகள் தரப்பட்டுள்ளன. முதலமைச் சரின் நலம் பயக்கும் சத்துணவுத் திட்டம் காரணமாக, மாநிலத்தில் பள்ளியிலிருந்து நின்று விடுதலும் கல்லாமையும் வேகமாகக் குறைந்து வருகின்றன. மேலும் மேல் நிலைப் பள்ளிப் படிப்பு வரை கல்வி எல்லோருக்கும் இலவசமாக்கப்பட்டுள்ளது. எனவே பிற்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு, மேல்நிலைப் பள்ளிப் படிப்புக்கு அப்பால், கல்லூரி மற்றும் தொழில் கல்விப் படிப்புக்கு மட்டுமே தேவைப்படும். ஆகவே கல்வி ரீதியில் பிற்பட்ட நிலையினைக் கண்டு பிடிக்க, மேல்நிலைப் பள்ளிப் படிப்பும் அதற்கு மேலும் உள்ள படிப்பைப் பொறுத்து பல இனத்தாரின் செயலாக்கம்தான் கணக்கில் எடுத்துக் கொண்டிருக்கப்படவேண்டும்—10-வது அல்லது அதற்குச் சமமான படிப்பு அளவில் அல்ல. மேலும், ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு மாநிலச் சராசரிக்குப் பதிலாக இந்த மூன்று வகைகளின் கீழும் முற்பட்ட வகுப்பினரின் சராசரி செயலாக்கம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கவேண்டும். ஏனெனில், கல்விச் சாதனைகளில், முற்பட்ட வகுப்பினர் தரத்திற்குப் பிற்பட்ட வகுப்பினரையும் கொண்டுவருதலே அரசின் நோக்கமாகும். குழுத் தலைவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட அளவு கோல்கள், மக்கட் தொகை அதிகமாக உள்ள வகுப்பின ருக்கே சாதகமாக உள்ளது. ஆனால், குறைந்த மக்கட் தொகையுள்ள பல பிற்பட்ட வகுப்பினர், இவ் அளவுகோல்களின் செயற்படுத்தல் காரணமாக மிகவும் துன்பத்திற்கு ஆளாகியுள்ளனர்.

### மாநிலச் சராசரியிலிருந்து வேறுபாடு :

பாலாஜி வழக்கில் தரப்பட்ட தீர்ப்பு, பின்னர் தரப்பட்ட பல தீர்ப்புகளினால், செல் திறனைப் பெரிதும் இழந்துவிட்டது. அந்த வழக்கிலும்கூட, மாணவர் தொகை யைப் பொறுத்த அளவில் மாநிலச் சராசரியிலிருந்து வேறுபாடு என்பது, மாநில அரசு, அரசிலமைப்புச் சட்டம் பிரிவு 15 (4) இன் கீழ் வேண்டப்படுவனவற்றிற்கு மாறுபடாத வகையில் கருதிப் பார்த்து முடிவு செய்யப்படவேண்டும் என்று கூறப் பட்டுள்ளது. பிற்படுத்தப் பட்டோர் இயக்கம் தமிழ் நாட்டில் நீண்ட வரலாறு கொண்டதாகும். நம் குழுவின் கணக்கெடுப்பின்படி, பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் எண்ணிக்கை, மாநில மக்கட் தொகையில் 67 சதவீதமாகும். திரு. காமராசர் ஆட்சியின் போதே, கல்வி 10 ஆவது நிலை (மெட்ரிக்குலேஷன்) வரை இலவசமாக்கப் பட்டது. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. ஆரின் அரசும் கடந்த எட்டு ஆண்டுகளில், கல்வி முன்னேற்றத்திற்காகப் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சரின் நலம் பயக்கும் சிறப்புத் திட்டமான சத்துணவுத் திட்டமும், மாணவ சமுதாயம் கல்வி முன்னேற்றம் காணப் பெரிதும் உதவியுள்ளது

எனவே, தமிழ்நாட்டில் நிலவும். தனி நிலைமைகளின் சூழ்நிலையில். மாநிலச் சராசரியிலிருந்து வேறுபடுவது என்பது அதிகப் பொருத்த முடையது அல்ல. வெவ்வேறு சதவீத வேறுபாடுகளைப் பின்பற்றுவதால் ஏற்படும் முறைகேடுகளை மண்டல் குழு ஏற்கனவே சுட்டிக் காட்டியுள்ளது. ஆதி திராவிடர் வகுப்பினரிலேயே, மாணவர் பள்ளியினின்றும் நின்று விடும் விகிதம், மாநிலச் சராசரியைவிட மிகவும் குறைவாகவுள்ளது. மாநிலச் சராசரியிலிருந்து வேறு வேறு வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால், வெவ்வேறு வகுப்பினரின் செயலாக்கம் ஒரே மாதிரியாக மாறுபடுவதில்லை. எடுத்துக்காட்டாக, குறியீட்டெண் 801, 802, 986 மற்றும் 243 தரப்பட்ட வகுப்பினர்கள் மாநிலச் சராசரியிலிருந்து 10 சதவீத வேறுபாட்டின் அடிப்படையில் முறையே 6, 7, 6, மற்றும் 8 புள்ளிகள் பெற்றுள்ளனர். அதே வகுப்பினர் மாநிலச் சராசரியின் அடிப்படையில் முறையே 8, 9, 10 மற்றும் 8 புள்ளிகள் பெறுகின்றனர். வெவ்வேறு சதவீத வேறுபாடுகளின் அடிப்படையில் முடிவுகளைக் கணக்கிட்டு அவைகளை விவாதத்திற்கு வைக்க 1984 நவம்பரிலேயே குழுத் தலைவர் ஒப்புக் கொண்ட போதிலும், 1985 பிப்ரவரி கடைசி வாரம் வரை அதனைத் செய்யத் தவறிவிட்டார். 19—11—1984 அன்றே திரு. அன்பில் தர்மலிங்கம், மாநிலச் சராசரியிலிருந்து 10 சதவீத வேறுபாட்டினை அடிப்படையாக எடுத்துக் கொள்வதை வன்மையாக எதிர்த்துள்ளார். எல்லா சூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டு, மாநிலச் சராசரியினையே அடிப்படையாகக் கொண்டு, அரசிடமும், குழுவிடமும் உள்ள ஒவ்வொரு வகுப்பினரின் சமூக மற்றும் கல்வி ஆய்வுகளின் முடிவுகளையும் ஆய்ந்து பார்ப்பதே சிறந்த முறையாக இருக்கும்.

இரண்டாவது கட்ட ஆய்வு முடிவுகளின் அடிப்படையில், முப்பது முற்பட்ட வகுப்பினரின் செயலாக்கத்தினை மாநிலச் சராசரி அடிப்படையில் அல்லாது, அவர்களிடையே ஒப்பிட்டுப் பார்த்து, அவர்களில் 17 வகுப்பினரை பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்த்திடக் குழுத் தலைவர் பரிந்துரைத்துள்ளார். இதற்கு ஏற்கக் கூடிய அடிப்படை இல்லை என்பதுடன், அவருடைய முந்தைய நிலைக்கும் முரணாக உள்ளது. குறியீட்டெண் 986 தரப்பட்ட கிறித்துவ நாடார், கிறித்துவ சாணார் மற்றும் கிறித்துவ கிராமணி வகுப்பினரைப் பொறுத்தவரை, அரசு அவர்களுடைய பிற்பட்ட நிலையினை நன்கு ஆய்ந்த பிறகே, அண்மையில்தான், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்த்தது. இம் முடிவினை சென்னை உயர்நீதி மன்றமும் ஏற்றுக் கொண்டுள்ளது.

மேலே கூறப்பட்டுள்ளக் காரணக் கூறுகளை கருத்தில் கொண்டு, குழுவாகிய நாங்கள், பல்வேறு வகுப்பினரின் பிற்பட்ட நிலையினை நிர்ணயிக்க குழுவிடமும் அரசிடமும் உள்ள ஏனைய விவரங்களுடன் கீழ்க்கண்ட அளவுகோல்களை உருவாக்கியுள்ளோம்.

மூன்று தலைப்புகளின் கீழ் குறியீடுகளும், கணிப்பு அடிப்படைகளும் கீழ்க்கண்டவாறு இருக்கலாம்.

### 1. சமூக ரீதியான பிற்பட்ட நிலை :

(1) மற்றவர்களால், சமூக ரீதியாகப் பிற்படுத்தப்பட்டவர்கள் என்று ஒப்புக் கொள்ளப்பட்ட சாதி அல்லது வகுப்பு.

#### (2) மரபு வழி தூய்மைக் கேடான வாழ்க்கைத் தொழில் :

சலவை, துப்புரவு செய்தல், பாளை உரித்தல், முடி திருத்தல், மீன்பிடித்தல், தோலுரித்தல் முதலிய தரக் குறைவான வாழ்க்கைத் தொழில்களை மரபு வழி செய்து வரும் சாதி அல்லது வகுப்பு.

#### (3) உடல் உழைப்புத் தொழில் :

உடல் உழைப்புத் தொழில் அல்லது பெண்கள் வேலை செய்வது அல்லது சிறுவர்கள் வேலை செய்வதைப் பெரிதும் சார்ந்துள்ளதும், மாநிலச் சராசரி அளவிற்குக் குறையாத சராசரி அளவு கொண்ட சாதி அல்லது வகுப்பு.

### 11. கல்வி ரீதியான பிற்பட்ட நிலை

(1) பல்கலைக் கழக நுழைவுரிமை பெற்றவர் (மெட்ரிக்குலேஷன்) அல்லது மேல்நிலைப் பள்ளிப் படிப்பு முடித்த மாணவர்களின் எண்ணிக்கை மாநில சாராசரிக்கு மேற்படாத சாதி அல்லது வகுப்பு.

(2) மருத்துவம், பொறியியல், கால்நடை மருத்துவம், சட்டம் இவற்றில் ஏதாயினும் இரண்டு தொழிற் கல்வி பட்டம் பெற்றோரின் எண்ணிக்கை மாநில சராசரிக்கு மேற்படாத சாதி அல்லது வகுப்பு.

(3) கல்லாதோரின் எண்ணிக்கை பள்ளியிலிருந்து நின்று விடுதல், மாநிலச் சராசரி அளவுக்கு குறைவுபடாத சாதி அல்லது வகுப்பு.

**111. வறுமை :**

குடிசைகளில் வாழ்கின்ற குடும்பங்களின் குடியிருப்புகளின் சதவீதம், மாநிலச் சராசரிக்கும் குறையாத அளவு உள்ள சாதி அல்லது வகுப்பு.

அல்லது

பிழைப்புக்கே கடன் வாங்கும் குடும்பங்களின் சதவீதம் மாநிலச் சராசரிக்குக் குறையாத அளவு உள்ள சாதி அல்லது வகுப்பு.

மேலே குறிப்பிடப்பட்ட மூன்று தலைப்புகளும் ஒரே படித்தான முக்கியத்துவம் உடையன அல்ல. எனவே அவைகட்கு கீழ்க்கண்டவாறு மதிப்பு கொடுக்கப்படுகிறது.

சமூக ரீதியான பிற்பட்ட நிலைக்கு, குறியீடு ஒன்றுக்கு 3 புள்ளிகள் வீதம், 9 புள்ளிகள் தரப்பட வேண்டும்.

கல்வி ரீதியான பிற்பட்ட நிலைக்கு, குறியீடு ஒன்றுக்கு 2 புள்ளிகள் வீதம், 6 புள்ளிகள் தரப்பட வேண்டும்.

வறுமைக் குறியீட்டின் கீழ் 3 புள்ளிகள் தரப்பட வேண்டும்.

ஆக மொத்த கணிப்பு அடிப்படை 18 புள்ளிகள் ஆகும். இந்தக் காரணக் கூறுகளின் அடிப்படையில், 50 சத வீதம் (அதாவது 9 புள்ளிகள்) பெறும் எல்லா சாதியினர் அல்லது வகுப்பினர், சமூக மற்றும் கல்வி ரீதியில் பிற்பட்டவர்களென பட்டியலிடப்பட வேண்டும்.

**பிற பிற்பட்ட வகுப்பினரை அடையாளம் கண்டுணர்தல் :**

சமூக கல்வி கள ஆய்வுகளின் அடிப்படையில் கண்டுபிடிப்புகள் நடைமுறையில் உள்ள சமூக உண்மைகளுக்கு முரணாக அமைந்துள்ளன. மண்டல் குழு கூட, மிகப் பிற்பட்ட வகுப்பினராகிய வண்ணார் மற்றும் படகர், குறைந்த புள்ளிகள் பெற்றதனால், முற்பட்ட வகுப்பினராகும் தகுதி பெறுவது போன்ற சில எடுத்துக் காட்டுக்களைக் கொடுத்துள்ளது. புள்ளி விவரங்கள் சேகரிப்பு முறையில் உள்ள குறைபாடுகளால், மாதிரி ஆய்வின் ஏறுமாறான செயலெல்லையின் விளைவாக இத்தகைய வழுவுகள் ஏற்படத்தான் செய்யும். இந்த வழுவினைத் திருத்த ஒரே வழி உள் நிலைமைகள் குறித்த செறிந்த அனுபவப் பழக்க அறிவும், குழுவிடமும், அரசிடமும் உள்ள ஏராளமான பொது மக்கள் சாட்சியம் மற்றும் விவரங்களைப் பயன்படுத்துவதுமேயாகும். குழுவில் எங்களது இறுதிக் கட்டக்காலத்தில் நாங்கள் இருந்து விநோதமான மற்றும் சங்கடமான நிலை காரணமாக, மேலே குறிப்பிட்டதலைப்பின் கீழ் அலகுக் கூறுகள் அளிப்பது குறித்து முறையெதையும் எங்களால் உருவாக்க இயலவில்லை. எனினும், இவ்விவரங்களுக்கு ஒவ்வொரு வகுப்பினருக்கும் ஆறு புள்ளிகள் அரசு ஒதுக்கலாம் என்று பரிந்துரைக்கிறோம். இதன்படி சமூக மற்றும் கல்வி ரீதியான பிற்பட்ட நிலைமைக்கு மொத்தம் 24 புள்ளிகள் (18+6) ஆகின்றன. இதில் 50 சதவீதம் (அதாவது 12 புள்ளிகள்) அல்லது அதற்கு மேல் பெறும் எந்தவொரு சாதி அல்லது வகுப்பும், சமூக மற்றும் கல்வி ரீதியாகப் பிற்பட்டவரென பட்டியலிடப்படலாம். ஏனையவை முற்பட்ட வகுப்பினராகக் கருதப்படலாம்.

முதற் கட்ட ஆய்வில், பிராமணர் போன்ற பல முற்பட்ட வகுப்பினர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டு, அவ்வகுப்பினர்கள் குறித்த விவரங்களைக் குழு சேகரித்துள்ளது. ஆனால், தற்போது பிற்பட்ட வகுப்பினராக உள்ள பல மதம் மாறிய வகுப்பினர் குறித்து அதே மாதிரி தனிப்பட்ட விவரங்கள் சேகரிக்கத் தவறிவிட்டது. கிறித்துவர்கள் குறித்த இயலில் இரண்டாவது அட்டவணை, பார்க்கவகுலம், அகமுடையார், கள்ளர், வன்னியர், யாதவர், மறவர், முத்துராஜா முதலிய 50 இந்து வகுப்பினர் குறித்து இரண்டாம் கட்ட ஆய்வு நடத்தப்பட்டதில் அவர்களில் மதம் மாறியவர்களும், ஆய்வில் சேர்த்துக்கொள்ளப்பட்டதை நிரூபிக்கும். எனவே, கிறித்துவ நாடார், கிறித்துவ சாணார் மற்றும் கிறித்துவ கிராமணி கிறித்துவப் பரவர் முதலியோர் குறித்துச் செய்யப்பட்டது போல, எந்தத் தலைமுறையில் மதம் மாறினார்கள் என்று பாராது, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள இந்து வகுப்பினரில் மதம் மாறிய வகுப்பினரையும், பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்று நாங்கள் பரிந்துரை செய்கிறோம்.

மாவட்டத் தலைமையிடங்களில் பொது மக்களின் சாட்சியங்களைப் பதிவு செய்ததலிலும், பல்வேறு வகுப்பினரின் பிரதிநிதிகளின் முறையீடுகளைக் கேட்டதிலும் பெற்ற பெரும் அனுபவத்தின் அடிப்படையில், சமுதாயத்தில் இழிவாகக் கருதப்படும் வாழ்க்கைத் தொழில்களைச் செய்து வரும் பல வகுப்பினரையும், ஆதி திராவிடர்களில் மதம் மாறியவர்களையும், மலைப் பகுதிகளில் வாழும் படகர் இனத்தாரையும், மிகப் பிற்பட்ட நிலையில் இன்னும் இருப்பதாகக் குழு உறுப்பினர்களாகிய நாங்கள் கருதுகிறோம். சமூக கல்வி ஆய்வின் முடிவுகள் எப்படி இருந்தபோதிலும், இவ்வகுப்பினர்,

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்படத் தகுதியுடையவர்கள். இறுதியாக குழுவினால் நடத்தப்பட்ட சமூக கல்வி ஆய்வுகளையும், மக்கட் தொகை விவரங்களையும், குறைந்தது பெரும்பான்மை வகுப்பினர் குறித்த விவரங்களையாவது அரசு தங்களிடமுள்ள சாதி வாரி மக்கட் தொகையின் பின்னணியில் மதிப்பிடப்பட்ட விவரங்களுடன் முழுமையாகச் சரிபார்க்க வேண்டுமென்று நாங்கள் ஒரு மனதாகப் பரிந்துரை செய்கின்றோம். சில பெரும்பான்மை வகுப்பினரின் மக்கட் தொகை எண்ணிக்கை, வேறு பல வகுப்பினரின் நிலையை பாதிக்கும் அளவுக்கு, பெரிதும் மிகைப்படுத்தப்பட்டுள்ளதென்றும், முழு நடவடிக்கையுமே ஒருதலைச் சார்புடையதாக இருந்தது என்றும் நாங்கள் கருதுகிறோம்.

*அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 15 (4) மற்றும் பிரிவு 16 (4) கீழ் ஒதுக்கீடு.*

1980 ஆம் ஆண்டு பிப்ருவரி திங்கள் 1-ஆம் நாளிட்ட சமூக நலத்துறை எண் 72-ல் ஏற்பளிக்கப்பட்டவாறு தற்போது செயலில் உள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலை, குழு ஆய்வு செய்யக் கேட்டுக்கொள்ளப்பட்டவாறு, அரசியலமைப்புச் சட்டப் பிரிவுகள் 15 (4) மற்றும் 16 (4)-இன் படியும், அச்சட்டத்தில் இதர தொடர்பான விதிகளின்படியும், இப்பொருள் பற்றி உச்ச நீதிமன்றம் அளித்துள்ள பல்வேறு தீர்ப்புகளின் படியும், குழு மறு பரிசீலனை செய்தது. குழு சேகரித்த தொடர்பான விவரங்களின் அடிப்படையிலும், 1980ஆம் ஆண்டு பிப்ருவரி திங்கள் 1ஆம் நாளிட்ட சமூக நல அரசாணை எண் 73இல் மாண்புமிகு டாக்டர் எம். ஜி. ஆர். அரசு தமிழ் நாட்டில் முதன் முறையாக, பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 50 சதவீதம் ஒதுக்கீடு செய்தது தொடர்ந்து நீடிக்கலாமா அல்லது அதில் ஏதேனும் மாறுபாடு இல்லையா என்பதையும் இக்குழு ஆய்ந்து, அடியில் கையெழுத்திட்ட இக்குழுவின் உறுப்பினர்கள் கீழ்க்கண்ட பரிந்துரைகளைச் செய்கிறோம்.

அடிப்படை உரிமைகள் இயலில் உள்ள பிரிவு 12இன் கீழ் ‘ அரசு ’ என்பதன் பொருள் விளக்க இந்திய அரசும், நாடாளுமன்றமும், மாநில அரசுகளும் அவ்வொவ்வொரு மாநில சட்டமன்றங்களும், இந்திய எல்லைக்குள் உள்ள அல்லது இந்திய அரசின் கட்டுப்பாட்டிற்குள் உள்ள எல்லா உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளும் உள்ளிட்டதாகும்.

பிரிவுகள் 15 (4) மற்றும் 16 (4)-ன் கீழ் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்பட்டுள்ள சரியீடு செய்யும் பாதுகாப்புக் கூட அடிப்படை உரிமைகள் கொண்ட இயலில்தான் உள்ளன. எனவே, வழிவழிமரபான வசதியற்ற பிற்பட்ட வகுப்பினர்களுக்கு, அவர்கள் ஏனைய முன்னேற்றமடைந்துள்ள வகுப்பினர் கல்வியிலும் சமுதாயத்தில் அடைந்துள்ள நிலை அளவுக்கு உயரும் வரை, அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க கடமை அல்லது கடப்பாடு, தமிழ்நாடு அரசு மற்றும் இந்திய அரசு இருவராலும் சமமாகப் பகிர்ந்து கொள்ளப்படவேண்டும். உண்மையில், இந்திய அரசிடம்தான் அதிகப் பண வசதியும், வேலைவாய்ப்பு அளிக்க ஆற்றலுமுள்ளது. எனினும், தமிழ் நாடு அரசு மற்றும் சில மாநில அரசுகள் செய்துள்ள போல, இந்திய அரசு இதுவரை, அரசியலமைப்புச் சட்டப் பிரிவுகள் 15 (4) மற்றும் 16 (4) இன் கீழ் ஒதுக்கீடு எதுவும் செய்யவில்லை. பிரிவு 46-ன் கீழும்கூட, சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவினரின், சிறப்பாக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின், கல்வி மற்றும் பொருளாதார நலன்களைத் தனிக் கவனத்துடன் அரசு மேம்படுத்துவதுடன் சமுதாய அநீதி மற்றும் எல்லா வகையான சுரண்டல்களிலிருந்தும் பாதுகாக்க வேண்டும். இங்கு நலிவுற்ற பிரிவினர் என்பது பிற்பட்ட வகுப்பினர் என்று பொருள் கொள்ள வேண்டும்.

அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 340 பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் நிலை குறித்து விசாரணை செய்து, அவர்களின் துன்பங்களைப் போக்கவும், இவர்களது நிலையினை மேம்படுத்தவும், அவர்களது நலனுக்கும் முன்னேற்றத்திற்கும் நிதி உதவி அளிக்கவும் உரிய பரிந்துரைகள் செய்ய குழு அமைக்க மைய அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது. எனினும், கடந்த 37 ஆண்டுகளில், மைய அரசு இரண்டு குழுக்களை மட்டுமே அமைத்தது. அது மட்டுமல்ல எந்தக் குழுவின் பரிந்துரையினையும் மைய அரசால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை என்பது மிகவும் துரதிருஷ்டமானது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலனுக்கென (மைய) அரசு செலவழித்த தொகை மிகவும் குறைவானது. ஒரு கணிசமான தொகையினை மாநில அரசுகளுக்கு மைய அரசு ஒதுக்காவிட்டால், மாநில அரசுகளால் பிரிவுகள் 15 (4) மற்றும் 16 (4) ன்கீழ் தேவையான போதுமான வெளிப்படையான முன்னேற்றம் எதுவும் செய்ய இயலாது. நெடுங்காலமாக இடையூறினால் சமூக மற்றும் கல்வி ரீதியில் பிற்பட்ட வகுப்பினரின் தகுதி நிலையை மேம்படுத்தும் பணியில் மைய அரசும் பங்கு கொள்ள முன் வந்தால், ஒரு சில பத்தாண்டுகளிலேயே அவர்களது நிலை பெரிதும் மாறிவிடும். அவ்வாறு செய்ய மைய அரசு முன் வர வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம்.

கல்வி அமைச்சகம் பல்கலைக் கழக நுழைவுத் தேர்விற்கு பிறகான படிப்பிற்கான உதவித்தொகை உட்பட பிற்பட்ட வகுப்பினருக்குச் செலவிட்ட தொகை முதல் திட்டக் காலத்தில் 1.63 சதவீதமும், இரண்டாவது திட்டக்காலத்தில் 1.87 சதவீதமும்

மூன்றாவது திட்டக்காலத்தில் 1.52 சதவீதமும், நாலாவது திட்டக் காலத்தில் 1.12 சதவீதமும், ஐந்தாவது திட்டக் காலத்தில் 0.83 சதவீதமுமே ஆகும் (சமூக நலத்துறை, 1969).

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் அல்லாத இந்த நலிவுற்ற பிரிவினர்' அல்லது பிற்படுத்தப்பட்ட பிரிவினரின் நிலைகள் முன்னேற்றம், வளர்ச்சிப் பணி களுக்காகச் செலவிடப்படும் தொகையிலிருந்து ஏற்படும் என்னும் இந்தியத் திட்ட அமைப்பாளர்களின் கருத்து அல்லது நம்பிக்கை சரியானதல்ல.

நன்மை பெற வேண்டிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் மிகப் பெரும் அளவி னைக் கருதும் போது, திட்டச் செலவில், இத் தொகைகள் மிகச் சிறியதொரு கூறாகும். எனவே, பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காகத் திட்டமிடப்படும் தனி நபர் செலவு பல மடங்கு அதிகரிக்கப்பட வேண்டும்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 1968-ல் அமைக்கப்பட்ட நாடாளு மன்ற கூட்டுக்குழு போன்று, உள்துறை அமைச்சகத்தில், பிற்படுத்தப்பட்டோர் நலம் பேண, ஒரு நாடாளுமன்ற கூட்டுக்குழு அமைக்கப்பட வேண்டும். இக்குறிக்கோளினை அடைய, அரசியலமைப்புச் சட்டத்தில் தேவையான திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும். அரசியலமைப்புச் சட்டத்தில், ஆதி திராவிடர் பழங்குடியினருக்காக ஒரு நிலையான தனி அலுவலர் நியமிக்கப்பட வழி செய்யப்பட்டுள்ள போது, பிற்படுத்தப் பட்ட வகுப்பினருக்காகவும் ஒரு சட்ட ரீதியான தனி அலுவலர் அமைக்க, அரசிய லமைப்புச் சட்டத்தில் வழி வகை செய்யப்பட வேண்டும்.

அரசியலமைப்புச் சட்டப் பிரிவுகள் 15 (4) மற்றும் 16 (4)-ன் கீழ் ஒதுக்கீடு செய்வதில் வரம்பு பற்றி, அடியில் கையெழுத்திட்ட குழு உறுப்பினர்கள், உச்ச நீதி மன்றம் மற்றும் பல்வேறு உயர்நீதி மன்றங்கள் அளித்துள்ள தீர்ப்புகளின் அடிப்படையில் கவனமாகப் பரிசீலித்தோம். எங்களது கருத்து வருமாறு :

முதலாவதாக, ஒதுக்கீடு செய்ய சட்டபூர்வமாக வரம்பு ஏதுமில்லை. ஆதி திராவிடர் பழங்குடியினருக்கு, ஏறத்தாழ அவர்களது மக்கட்தொகையின்படி அடிப் படையில் மைய அரசு 18 சதவீதம் ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழ் நாட்டின் மக்கள் தொகையில் 67.15 சதவீதமுள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு, 67 சத வீதம் ஒதுக்கீடு செய்வது சட்டத்திற்கோ, அரசியலமைப்புச் சட்டத்திற்கோ முரணானது அல்ல. பாலாஜி வழக்கில் தீர்ப்பு (ஏ. ஐ. ஆர். 1963 எஸ். சி. 649) 1963-ல் அளிக்கப்பட்டது. இத் தீர்ப்பில்தான், ஒதுக்கீடு சாதாரணமாக 50 சதவீதத்திற்கு (அதாவது 32 சதவீதம் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் 18 சதவீதம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கும்) மேற்படக் கூடாது என்று கூறப்பட்டிருந்தது. பின்னைய வழக்கான கேரள மாநிலம் எதிர் என். எம். தாமஸ் வழக்கில் (ஏ. ஐ. ஆர். 1976 எஸ். சி. 490) சுட்டிக்காட்டப்பட்டதுபோல, இது ஒரு எச்சரிக்கை அறிவுரை மட்டுமே.

மேலே குறிப்பிட்ட தாமஸ் வழக்கு உச்ச நீதி மன்றத்தின் 7 நீதிபதிகள் கொண்ட குழு நடுவர் ஆயத்தால் கொடுக்கப்பட்டத் தீர்ப்பாகும். இது நம் நாட்டின் உச்ச நீதி மன்றத்தின் கடைசிக் காலத் தீர்ப்பாகும். இன்று வரை இத்தீர்ப்பு வேறு உச்ச நீதி மன்றத் தீர்ப்பு எதனாலும் ஒதுக்கித் தள்ளப்படவில்லை. அந்த வழக்கில் நீதிபதி பசல் அலியின் குறிப்புரை வருமாறு :

"மக்கட் தொகையில் 80 சத வீதம் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைக் கொண்ட ஒரு மாநில அரசு அவர்களுக்கு 80 சதவீத ஒதுக்கீடு செய்யுமாயின் அனுமதிக்கப்பட்ட அளவுகளை அது மீறியதாகும் என்று கூற முடியாது".

கற்றறிந்த நீதிபதி பசல் அலியின் இந்தக் கருத்து 'தீர்ப்பின் புறவுரை' (ஆபிட்டர் டிக்டா) அல்ல. நம் குழுத் தலைவர் போன்ற யாரேனும் அது தீர்ப்பின் புறவுரை என்று கருதினாலும், உயர்நீதிமன்றங்களை அத்தகைய தீர்ப்பின் புறவுரைகள் கட்டுப் படுத்தும். தாமஸ் வழக்கின் முடிவுகள், பின்னைய ஏ. பி. எஸ். ட்டி. சங் எதிர் இந்திய அரசு (ரயில்வே) (1980–11 பணித் தொகுதி சட்ட குறிப்பேடு 734) வழக்கிலும் ஆதரிக்கப்பட்டுள்ளது. மேலும், நம்முடைய சென்னை உயர் நீதி மன்றத்தில் அண்மை யில் நீதிப் பேராண்மை எண்கள் 6425-6961/1980 வழக்குகளில் 1981ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 13ஆம் நாளன்று நீதிபதி மோகனால் வழங்கப்பட்ட தீர்ப்பும் எங்களுடைய கருத்துக்கு ஆதரவாக உள்ளது. நீதிபதி மோகன் உச்சநீதி மன்றம், உயர்நீதி மன்றங்களின் பல தீர்ப்புகளையும் விரிவாக ஆராய்ந்து, பின், பிற்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கீடு 50 சதவீதத்திற்கும் அதிகமாக இருக்கக் கூடாது என்று மூதுரை ஏதுமில்லை என்று கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகிறார்—உண்மையில் நீதிபதி கிருஷ்ணய்யரை மேற்கோள் காட்டுகிறார்—"7 உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கொண்ட முழு நடுவர் ஆயத்தால் அளிக்கப்பட்டத் தீர்ப்பு நாட்டின் சட்டமாகும். அதற்கு எதிரான எந்தக் கருத்தும் சரியான சட்ட விதியாகாது." நீதிபதி மோகன் மேலும் கூறுவதாவது, "நீதிபதி பசல் அலியின் தீர்ப்பு அவருடைய கருத்து மட்டுமே என்று கூற உயர்நீதி மன்றத்திற்கு அதிகாரம் இல்லை. உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பின் புறவுரைகளும் உயர்நீதிமன்றத்தைக் கட்டுப்படுத்தும். எனவே 1980ஆம் ஆண்டு

பிப்ரவரி திங்கள் 1ஆம் நாளிட்ட அரசாணை எண் 73-ல் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டை 31 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக நம்முடைய தமிழ்நாடு அரசு உயர்த்தியிருப்பதை நான் நிலைநிறுத்த வேண்டியவனாக இருக்கிறேன்'' இத்தீர்ப்பு இப்பொருளுக்கு நேரடித் தொடர்பு உள்ளதாகும் இன்று வரை இத் தீர்ப்பு ஒதுக்கிவைக்கப்படவில்லை.

எனவே, தமிழ்நாட்டில் உள்ள மக்கட் தொகையில் 67 சதவீதமுள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு, அந்த விகித அடிப்படையில், அரசியலமைப்புச் சட்டப் பிரிவுகள் 15 (4) மற்றும் 16 (4)-ன் கீழ் 67 சதவீதம் ஒதுக்கீடு செய்ய அரசுக்குப் பரிந்துரைக்க நாங்கள் துணிவு கொண்டுள்ளோம். பொதுச் சேர்மத்தின் கீழ் 32 சதவீதத்திலும் தகுதியினால் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நுழைந்து விடுகிறார்கள் என்று ஒரு சில இடங்களில் குறை உள்ளது. இவ்வாறு கொஞ்சம் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆக்கிரமிப்புச் செய்கின்றனர் என்றும் குற்றச்சாட்டு உண்மையாக இருந்தாலும், அது முற்பட்ட வகுப்பினரின் பயன் பெறும் சதவீதத்தைப் பாதிக்காது ; ஏனெனில் அப்போதும் மொத்த மக்கட் தொகையில் அவர்களது சதவீத விகிதத்திற்குச் சமமாக அல்லது குறைவாகத்தான் இருக்கும். எனினும், இதுகுறித்து இறுதி முடிவு எடுப்பதை நாங்கள் அரசுக்கு விட்டுவிடுகிறோம். ஒதுக்கீட்டினை மாற்றியமைப்பது குறித்து மாநில அரசு இறுதியாக ஒரு முடிவு எடுக்கும் வரை, 1980ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 1ஆம் நாளிட்ட அரசாணை எண் : 73-ல் செய்யப்பட்ட 50 சதவீத ஒதுக்கீடு தொடர்ந்து இருக்கலாமென்றும் அதில் மாற்றம் எதுவும் தேவையில்லை என்றும் நாங்கள் பரிந்துரை செய்கிறோம். நீதித் துறைக்கும் செயலாட்சித் துறைக்கும் பிரிவுகள் 15 (4) மற்றும் 16 (4)-ன் கீழ் மாநில அரசுகள் ஒதுக்கீடு செய்வதில் அடிக்கடி போராட்டம் இருப்பதை நாங்கள் அறிவோம். வசதி படைத்த, கல்வி ரீதியில் மிகவும் முற்பட்ட வகுப்பினரின் மாணவர்களில் சிலரே நீதிமன்றம் செல்கின்றனர். மனக்குறைவுள்ள சிலரது குறைகளை நிவர்த்திக்கும் முயற்சிகளில் நீதிமன்றங்கள் அளிக்கும் தீர்ப்புகள், பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் முன்னேற்றத்தினைப் பெரிதும் பாதிக்கின்றன.

அரசியலமைப்புச் சட்டப் பிரிவுகள் 15 (4) மற்றும் 16 (4)-ன் கீழ் இயற்றப்படும் சட்டங்களுக்கு, பிரிவு 31-சியின் கீழ் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என்று மாநில சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நாங்கள் ஆலோசனை கூற விரும்புகிறோம்.

குழுவின் ஆய்வு வரம்பு இனம் 1ஐப் பொறுத்த வரை, தமிழ்நாடு மாநில அரசு, பிரிவுகள் 15 (4) மற்றும் 16 (4)-ன் கீழுள்ள எல்லா நன்மைகளுக்கும் தகுதி பெற்றப் பிற்படுத்தப் பட்டவகுப்பினர் பட்டியல் ஒன்றினைச் செயற்படுத்தி வருகிறது. ஜானகி பிரசாத் பரிமு எதிர் ஜம்மு காஷ்மீர் வழக்கில் (ஏ. ஐ. ஆர். 1973 என். சி. பக்கம் 930) கீழ்க் கண்டவாறு தரப்பட்டுள்ள முடிவினைக் கருத்திற் கொள்ளலாம் :—

'' பிரிவு 15 (4) '' சமூக மற்றும் கல்வி ரீதியில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு குடிமக்கள் பற்றிக் கூறுகிறது'. ஆனால், பிரிவு 16 (4), ' எந்த ஒரு பிற்படுத்தப்பட்ட வகுப்பு குடிமக்கள் ' பற்றி மட்டும் கூறுகிறது. எனினும் பிரிவு 16 (4)-ல் குறிப்பிடப்படும் பிற்படுத்தப்பட்ட வகுப்புக் குடிமக்கள் ' என்கிற தொடரும் பிரிவு 15 (4)-ல் குறிப்பிடப்பட்டுள்ள ' சமூக மற்றும் கல்வி ரீதியில் பிற்படுத்தப்பட்ட வகுப்புக் குடிமக்கள் '' என்கிற தொடரும் ஒரே பொருள் விளக்கம் கொண்டவையே, ' பிற்படுத்தப்பட்ட வகுப்புக் குடிமக்கள் ' என்று கூறத் தகுதிபெற, அவர் சமூக மற்றும் கல்வி ரீதியில் பிற்படுத்தப்பட்ட வகுப்பின் ஒரு உறுப்பினராக இருக்க வேண்டும். பிரிவுகள் 15 (4) மற்றும் 16 (4) இரண்டுக்குமே, ஒரு வகுப்பின் சமூக மற்றும் கல்வி ரீதியான பிற்பட்ட நிலையே அடிப்படை ''.

அரசியலமைப்புச் சட்டப் பிரிவுகள் 15 (4) மற்றும் 16 (4) இரண்டின் கீழும் ஒதுக்கீடு மற்றும் சலுகைகள் செய்வதற்கு, 1980ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 1ஆம் நாளிட்ட அரசாணை எண் 72-ல் தமிழ்நாடு அரசால் ஏற்பளிக்கப்பட்டு தற்போது நடைமுறையில் உள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலே, தொடர்ந்து இருக்கலாம் என்று நாங்கள் கருதுகிறோம்.

பிரிவு 16 (4)-ன் கீழ் பணியிடங்களுக்கு ஒதுக்கீடு செய்ய ஒரு தனிப் பட்டியல் தயாரிப்பது குழுவின் ஆய்வு வரம்புக்குட்பட்டது அல்ல. சமூக ரீதியாக பிற்பட்ட நிலையும் கல்வி ரீதியாக பிற்பட்ட நிலையும் ஒன்றொடொன்று தொடர்புடையதும், இணைந்ததும், பிரிக்க முடியாததும் ஆகும். சில பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் சில குடும்பங்கள் தொழில் மற்றும் வேலைவாய்ப்பும் பெற்றிருக்கின்றன என்று கண்டறிந்தது, அவ்வகுப்பினர் கல்வி ரீதியில் முன்னேற்றமடைந்துவிட்டனர் என்று பொருள்படாது. வேலைவாய்ப்புக்கு வழி செய்வது என்பது பிரிவு 16 (4)-ன் குறிக்கோள். அக்குறிக்கோளை அடைய பிரிவு 15 (4)-ன் கீழ் பெறும் கல்விச் சலுகைகள் வழியாகும்.

## மாற்றப்பட்ட நிலப்பகுதிகள் :

மாற்றப்பட்ட நிலப் பகுதிகளைப் பொறுத்த வரை, அவர்களுக்கென ஒரு தனிப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியல் உள்ளது. அங்கே உள்ள நிலைமைகள், மாநிலத்தின் பிற பகுதிகளில் உள்ளவைகளின்றும் வேறுபட்டவை. மேலும், அவர்கள் மாநிலங்கள்

சீரமைப்புக்கு முன் இருந்த அதே சலுகைகளைத் தொடர்ந்து அனுபவித்து வருகின்றனர். அவர்களுக்குப் பாதகமான முறையில், அச்சலுகைகளைத் திரும்பப் பெற இயலாது; எனவே, பட்டியலிலிருந்து எந்த ஒரு வகுப்பினரையும் நீக்கம் செய்யப்படக் கூடாது.

குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்களின் கருத்துக்களையே குழுவின் பரிந்துரைகளாக குழுத் தலைவர் அறிக்கையில் ஒருங்கிணைத்துக் கொள்வார் என்று கடைசி நிமிடம் வரை நாங்கள் எதிர்பார்த்திருந்தோம். ஆனால், துரதிருஷ்டவசமாக அவ்வாறு செய்ய அவர் இசையவில்லை. எனவே, குழுவின் பரிந்துரைகளாக நாங்கள் தயாரித்தவற்றை, உரிய நடவடிக்கைக்காக, அரசுக்கு நாங்கள் அளிப்பது மிகவும் அவசியமாக ஆகியுள்ளது.

இந்த உயர் மட்டக் குழுவின் உறுப்பினர்களாக கடந்த இரண்டாண்டு காலமாகப் பணியாற்றும் வாய்ப்பினை அளித்தமைக்கு, மாண்புமிகு முதல் அமைச்சர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களுக்கு நாங்கள் மிகவும் நன்றிக் கடன் பட்டுள்ளோம்.

இத்துடன், அரசியலமைப்புச் சட்டப் பிரிவுகள் 15 (4) மற்றும் 16 (4)-ன் கீழ் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலை நாங்கள் இணைத்துள்ளோம்.

<u>உறுப்பினர்கள் :</u>

(ஒம்) ஜி. விஸ்வநாதன்.
(ஒம்) வி. வி. சுவாமிநாதன்.
(ஒம்) அன்பில் தர்மலிங்கம்.
(ஒம்) கே. லியாகத் அலிகான்.
(ஒம்) சௌந்தரா கைலாசம்.
(ஒம்) எஸ். கோபாலகிருஷ்ண யாதவ்.
(ஒம்) குழ. செல்லையா.
(ஒம்) ஐ. டி. ஜவகர் ராஜ்.
(ஒம்) எஸ். கே. பாலகிருஷ்ணன்.
(ஒம்) எம். கே. பாலசுப்பிரமணியம்.
(ஒம்) குமரி அனந்தன்.
(ஒம்) எம். சமரசம்.
(ஒம்) எம். ஜான் வின்சென்ட்.
(ஒம்) துரை ராமசாமி.

## இரண்டாம் பிற்படுத்தப்பட்ட வகுப்பு குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட தமிழ்நாடு மாநிலம் முழுவதிலும் உள்ள பின்தங்கிய வகுப்பினர் பட்டியல்.

(1) (அ) முக்குலத்தோர் வகுப்பினைச் சேர்ந்த தென் தமிழ் மாவட்டங்களில் வாழும் அகமுடையார்—

(ஆ) வட மாவட்டங்களைச் சேர்ந்த அகமுடையார்.

(இ) தொழு அல்லது துளுவ வேளாளர்.

(2) அம்பலக்காரர்.
(3) ஆண்டிப்பண்டாரம்.
(4) அர்ச்சகாரி வேளாளர்.
(5) படகர்.
(6) பெஸ்தா, சிவியர்.
(7) பட்ராஜு (க்ஷத்திரிய ராஜுவைத் தவிர).
(8) பில்லவா.
(9) பொண்டில்.
(10) போயர், ஒட்டர்.
(11) தாசரி.
(12) தெக்கனி முஸ்லீம்கள்.
(13) தொம்மாரா.
(14) தேவாங்கர் (சேடர்).

(15) டியூடேகுலா.

(16) ஏனாதி.

(17) எரவல்லர் (கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள செங்கோட்டை வட்டம் நீங்கலாக அங்கு இந்த வகுப்பினர் பழங்குடியினராகக் கருதப்படுவர்.)

(18) கங்கவார்.

(19) கவரா, கவரை (Gavarai, Kavarai) மற்றும் வடுகர் (வடுவர்)—கம்மா, காப்பு பலிஜா மற்றும் ரெட்டி நீங்கலாக.

(20) கௌடர் (கம்மாளர், கலாலி மற்றும் அனுப்ப கௌண்டர் உள்பட).

(21) கிறித்துவ மதம் மாறிய தாழ்த்தப்பட்டோர் (எந்த காலத்தில் மதம் மாறியவர்களாக இருப்பினும் சரி—கல்வி நிறுவனங்கள், அரசுப்பணிகள் இவற்றில் ஒதுக்கீட்டுக்காக.)

(22) ஹெக்கடே.

(23) இடிகா.

(24) இல்லத்துப் பிள்ளைமார்.

(25) இசை வேளாளர்.

(26) ஜாம்பவானோடை.

(27) ஜங்கம்.

(28) ஜெட்டி.

(29) ஜோகி.

(30) கப்போரா.

(31) கம்பர்.

(32) கைக்கோளர், செங்குந்தர்.

(33) கலிங்கி.

(34) கள்ளர்.

(35) கல்வேலி கவுண்டர்.

(36) கம்மாளர் அல்லது விஸ்வகர்மா மற்றும் விஸ்வகர்மாளா (பொற்கொல்லர், கன்னார், கருமார், கொல்லர், தச்சர், கல்தச்சர் உள்ளிட).

(37) கானி அல்லது கனிசு அல்லது கானியர் பணிக்கர்.

(38) கன்னட சைனீகர், கன்னடியார் மற்றும் கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்களில் வாழும் தாசபளஞ்சிகர்.

(39) கருணீகர் (சீர் கருணீகர், ஸ்ரீ கருணீகர், சாரட்டு கருணீகர், கைகட்டி கருணீகர், மது வழி கணக்கர், சோழி கணக்கர் மற்றும் சுண்ணாம்பு கருணீகர்).

(40) கடேசர் அல்லது பட்டம்பகட்டி.

(41) கவுத்தியர்.

(42) கேரள முதலி.

(43) கார்வி.

(44) கத்ரி.

(45) கோயம்புத்தூர் மாவட்ட கொங்கு செட்டியார்.

(46) கொங்கு வேளாளர்கள் (வேளாள கௌண்டர், நாட்டு கௌண்டர், நரம்பு கட்டி கௌண்டர், திருமுடி வேளாளர், தொண்டு வேளாளர், பால கௌண்டர், பூசாரி கௌண்டர், அனுப்ப வேளாள கௌண்டர், குரும்ப கௌண்டர், படைத்தலை கௌண்டர், செந்தலை கௌண்டர், பவளகக்கட்பி வேளாள கௌண்டர், பால வேளாள கௌண்டர், சங்கு வேளாள் கௌண்டர் மற்றும் இரத்தினகிரி கௌண்டர்.)

(47) கொப்பல வேலம்மா.

(48) கொரச்சா.

(49) கோட்டேயர்.

(50) குலாலா, குயவர், கும்பரர்.

(51) குஞ்சிடிகர்.

(52) குன்னுவர் மன்னாடி.

(53) குரும்பர்.

(54) குருகினி செட்டி.

(55) தமிழ் அல்லது உருது பேசும் லப்பைகள்.

(56) லம்பாடி.

(57) பிராமணரல்லாத மராட்டியர் (நாமதேவ மராட்டியர் உள்பட).

(58) மலையர்.

(59) மாப்பிள்ளா.

(60) மாலி.

(61) மறவர்.

(62) மருத்துவர், நாவிதர், மங்களா, வேலகட்டலவர், வேலகட்டலநாயர் மற்றும் பரனோ பகாரி.

(63) மோனியகார்.

(64) மவுண்டாடன் செட்டி.

(65) மகேந்திர, மேதாரா.

(66) முக்குவர் அல்லது முகையர் (கிறித்தவ மதம் மாறியவர்கள் உள்பட).

(67) முட்லகம்பட்டி.

(68) முத்துராஜா (முத்துராசா, முட்டிரியர், முத்திரியர் மற்றும் முத்தரையர்).

(69) நாடார், சாணார் மற்றும் கிராமணி.

(70) நகரம்.

(71) நன்குடி வேளாளர்.

(72) நரிக்குறவர்.

(73) நோக்கர்.

(74) ஒடியா.

(75) ஓவச்சார்.

(76) பாமுலு.

(77) பாணர் (கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள செங்கோட்டை வட்டம் நீங்கலாக—அங்கு இவர்கள் தாழ்த்தப்பட்டோர்களாகக் கருதப்படுவர்.)

(78) பண்ணையார் (கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கத்திக்காரர் உட்பட).

(79) பன்னிரெண்டாம் செட்டியார் அல்லது உத்தம செட்டியார்.

(80) பரவர் (கிறித்துவ மதம் மாறியவர்கள் உள்பட)—கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள செங்கோட்டை வட்டம் நீங்கலாக—அங்கு இவர்கள் தாழ்த்தப்பட்டோராக கருதப்படுவர்.)

(81) பார்க்கவ குலம் (சுருதிமார், மலையமார், நந்தமார்).

(82) மீனவர் (பர்வதராஜகுலம், பட்டணவார், செம்படவர்)—கிறித்துவ மதம் மாறியவர்கள் உள்பட).

(83) பெரிக்கி.

(84) பொரயா.

(85) புல்லுவர்.

(86) புன்னான் வேட்டுவ கௌண்டர்.

(87) புசாலா.

(88) ரெட்டி (கஞ்சம்).

(89) சாது செட்டி (தெலுங்குச் செட்டி, தெலுங்குப்பட்டிச் செட்டி, இருபத்து நான்கு மனைத் தெலுங்குச் செட்டி உள்பட).

(90) சாலிவாகனர்.

(91) சாலியர் (பத்மசாலியர், பட்டு சாலியர், பட்டாரியர், அடவியர்).

(92) சாத்தாத ஸ்ரீ வைஷ்ணவா (சாத்தானி உள்பட).

(93) சவலக்காரர்.

(94) சேனைத் தலைவர், சேனைக்குடையார், இலைவாணியர்,

(95) சௌராஷ்டிரா (பட்டுநூல்காரர்).

(96) சோழிய செட்டி.

(97) சோழிய வேளாளர் (சோழ வேளாளர், வெற்றிலைக்காரர், கொடிக்கால் காரர் மற்றும் கீரைக்காரர்).

(98) ஸ்ரீசாயர்.

(99) தொகட்ட வீரக்ஷத்திரியர்.

(100) துளுவ நாய்க்கர் மற்றும் வெத்தலக்கார நாயக்கர்.

(101) தோரியர்.

(102) தொட்டிய நாய்க்கர் (இராஜகம்பலம், கொல்லவர், சில்லவர், தொக்கலவர் மற்றும் துளுவ நாயக்கர் உள்பட).

(103) தொண்டமான்.

(104) உப்பரா.

(105) உரளி கவுண்டர் (மாநிலம் முழுவதும், ஒருதாய) கவுண்டர் (மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்கள் மட்டிலும்).

(106) வலையர்.

(107) வால்மீகி.

(108) வாணியர், வாணிய செட்டியார் (கண்டலா, கணிகா, தெலிகுலா, செக்காளர் உள்பட).

(109) வண்ணார் (சலவைத் தொழிலாளர்) (கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள செங்கோட்டை வட்டம் நீங்கலாக—அங்கு இவர்கள் தாழ்த்தப்பட்டோராகக் கருதப்படுவர்).

(110) வன்னியகுல க்ஷத்திரியர் (வன்னியா, வன்னியர், வன்னிய கவுண்டர் கவுண்டர் அல்லது கண்டர் படையாச்சி, பள்ளி உள்பட).

(111) வேடர் (கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத் திலுள்ள செங்கோட்டை வட்டம் நீங்கலாக—அங்கு இவர்கள் தாழ்த்தப்பட்டோராகத் கருதப்படுவர்).

(112) வல்லம்பர்.

(113) வெள்ளான் செட்டியார்.

(114) வேட்டைக்காரர்.

(115) வேட்டுவக் கௌண்டர்.

(116) வீரக்கொடி வேளாளர் (மாநிலம் முழுவதும்).

(117) ஒக்கலிகர் (வக்கலிகர், ஒக்கலிகர், கப்பிலியர், கப்பிலியா ஒக்கலியா, கௌட ஒக்கலியா கவுண்டர், ஒக்கலியா கௌடா).

(118) வைநாடு செட்டி நீலகிரி மாவட்டம்.

(119) யாதவர் (இடையர், தெலுங்கு பேசும் வடுக ஆயர் அல்லது வடுக இடையர் அல்லது கொல்லா, மோண்டு கொல்லா, ஆஸ்தாந்திர கொல்லா அடங்கலாக).

(120) யவனே.

(121) ஏருகுலா.

(122) யோகீஸ்வரர்.

## விளக்கவுரை.

கீழே பட்டியலில் பத்தி (1)-ல் குறிப்பிடப்பட்டுள்ள பழைய பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட உட்பிரிவுகளைச் (Sub-sects) சேர்ந்த எந்த நபரும், பத்தி (2)-ல் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய வகுப்பைச் (Main Community) சேர்ந்தவர்களாகக் கருதப்படுவர் :

| பழைய பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட உட்பிரிவுகளின் பெயர். | முக்கிய வகுப்பின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 1. மூப்பனார், நைனார். | 1. பார்க்கவ குலம் (சுருதிமார், மலையமார், நத்தமார்). |
| 2. ஈசநாட்டு கள்ளர். | 2. கள்ளர். |
| 3. இல்லுவர் (எழுவர் இல்லத்தார்). | 3. இல்லத்துப் பிள்ளைமார். |
| 4. அக்னிகுல ஷத்திரியர். | 4. வன்னியகுல ஷத்திரியா (வன்னியா, வன்னியர், வன்னிய கவுண்டர், கவுண்டர், கண்தர், படையாச்சி, பள்ளி உட்பட). |
| 5. உப்பிலிய சகாரா. | 5. உப்பரா. |
| 6. சாட்டாடி, சாட்டாட ஸ்ரீ வைஷ்ணவா. | 6. சாத்தாத ஸ்ரீ வைஷ்ணவா (சதானி உள்பட). |
| 7. அகஸா, மடிவலா, ஏகாலி, இராஜ குலா, வேலுதடர், இராஜக்கா. | 7. வண்ணார் (சலவைத் தொழிலாளர்). |
| 8. பெரிக்கி பலிஜா. | 8. பெரிக்கி. |
| 9. கம்சலா, விஸ்வபிராமணர். | 9. கம்மாளர் அல்லது விஸ்வகர்மா மற்றும் விஸ்வ கம்மாளா (தட்டார் அல்லது பொற்கொல்லர், கன்னார், கருமார் அல்லது பொற் கொல்லர், தச்சர் மற்றும் கல் தச்சர் உட்பட). |
| 10. கருமறவர். | 10. மறவர். |

## பட்டியல் இரண்டு.

கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள செங்கோட்டை வட்டத்திலுள்ள பகுதிகளுக்கு மட்டும் உரித்தான திருத்தியமைக்கப்பட்ட பட்டியல்.

1. ஆள்வார், ஆழ்வார் மற்றும் ஆலவார்.
2. ஆரேயர் (நூலயார்).
3. ஆரியவத்தி.
4. சவலக்காரர்.
5. செட்டு அல்லது செட்டி (கோட்டார் செட்டி, ஏழூர் செட்டி, பாத்திரச் செட்டி, வளையல் செட்டி, புதுக்கோட்டைச் செட்டி உள்பட).
6. எழுத்தச்சர்.
7. எழவாதி.
8. ஈழவர்.
9. கலாரி குரூப் (கலாரி பணிக்கர்).
10. குடும்பி.
11. நாய்க்கர்.
12. நாஞ்சில் முதலி.
13. ஒடன்.

14. பெரும்கொல்லர்.
15. சக்கரவர் (காவதி).
16. தொல்கொல்லர்.
17. வீரசைவர்.
18. வேலுத்தடத்து நாயர்.
19. கிருஷ்ணன்வாகா.
20. லத்தீன் கத்தோலிக்கர்கள்.
21. முன்னாள் எஸ்.ஐ.யு.சி.யைச் சேர்ந்த சி.எஸ்.ஐ.

குறிப்பு.—கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகுப்பினர்கள் யாவரும் கல்வி நிறுவனங்கள், அரசுப் பணிகள் இவற்றில் ஒதுக்கீடு செய்யும் நோக்கத்திற்காக மட்டும், பின் தங்கிய வகுப்பினர்களாகக் கருதப்படுவர்—

(அ) லத்தீன் கத்தோலிக்கர்கள்.
(ஆ) கிருஷ்ணன் வாகா.
(இ) முன்னாள் எஸ்.ஐ.யு.சி.யைச் சேர்ந்த சி.எஸ்.ஐ.

## பட்டியல் மூன்று.

மாநிலம் முழுவதற்குமான மிகவும் பின் தங்கிய வகுப்பினர் பட்டியல் :—

1. அம்பலக்காரர்.
2. ஆண்டிப்பண்டாரம்.
3. பெஸ்தா, சிவியர்.
4. பட்ராஜு (க்ஷத்திரிய ராஜு அல்லாதார்).
5. போயார், ஒட்டர்.
6. தாசரி.
7. டொம்மரா.
8. ஏரவல்லர் (கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள செங்கோட்டை வட்டம் நீங்கலாக—அங்கு இவர்கள் ஒரு பழங்குடியினராகக் கருதப்படுவர்).
9. இசை வேளாளர்.
10. ஜாம்பவானோடை.
11. ஜங்கம்.
12. ஜோகி.
13. கோயம்புத்தூர் மாவட்ட கொங்கு செட்டியார்கள்.
14. கொராச்சா.
15. குலாலா (குயவர் மற்றும் கும்பரர் உள்பட).
16. குன்னுவர் மன்னாடி.
17. குரும்பர்.
18. குருகிணி செட்டி.
19. மருத்துவர், நாவிதர், மங்களா, வேலக்கட்டலவர், வேலக்கட்டல நாயர் மற்றும் பரனோபகாரி.
20. மோண்டு கொல்லா.
21. மவுண்டாடன் செட்டி.
22. மகேந்திரா, மேதரா.
23. முட்லகம்பட்டி.
24. நரிக்குறவர்.
25. நோக்கர்.
26. வன்னியகுல க்ஷத்திரியர் (வன்னியர், வன்னியா, வன்னிய கவுண்டர், கவுண்டர் அல்லது கண்டர், படையாச்சி, பள்ளி உட்பட).
27. பரவர் (கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள செங்கோட்டை வட்டம் நீங்கலாக—அங்கு இவர்கள் தாழ்த்தப்பட்டோராகக் கருதப்படுவர்).

28. மீனவர் (பர்வதராஜகுலம், பட்டணவார், செம்படவர்).

29. புன்னான் வேட்டுவக் கவுண்டர்.

30. சாத்தாத ஸ்ரீ வைஷ்ணவா (சாத்தாணி உள்பட).

31. சோழியச்செட்டி.

32. தெலுங்குப்பட்டிச் செட்டி.

33. தொட்டிய நாயக்கர் (ராஜகம்பலம், கொல்லவர், சில்லவர், தொக்கலவர் மற்றும் தொழுவ நாயக்கர் உட்பட).

34. தொண்டமார்.

35. வலையர்.

36. வண்ணார் (சலவைத் தொழிலாளர்)—கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள செங்கோட்டை வட்டம் நீங்கலாக, அங்கு இவர்கள் ஒரு தாழ்த்தப்பட்ட வகுப்பினராகக் கருதப்படுவர்.

37. வேட்டைக்காரர்.

38. வேட்டுவக் கவுண்டர்.

39. யோகீஸ்வரர்

விளக்கவுரை.

கீழே பட்டியலில் பத்தி (1)-ல் குறிப்பிடப்பட்டுள்ள பழைய பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட உட்பிரிவுகளைச் (Sub-sects) சேர்ந்த எந்த நபரும், பத்தி (2)-ல் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய வகுப்பைச் (Main Community) சேர்ந்தவர்களாகக் கருதப்படுவர் ;

| பழைய பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட உட்பிரிவுகளின் பெயர். | முக்கிய வகுப்பின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 1. அக்னிகுல க்ஷத்திரியா | 1. வன்னிய குல க்ஷத்திரியா (வன்னியா, வன்னியர், கவுண்டர் அல்லது கண்டர், படையாச்சி, பள்ளி உள்பட). |
| 2. சட்டாடி சட்டாடா ஸ்ரீவைஷ்ணவா. | 2. சாத்தாதா ஸ்ரீவைஷ்ணவா (சாத்தானி உள்பட). |
| 3. அகஸா, மடிவாலா, ஏகாலி, இராஜ குலா, வேலுதடார், ராஜக்கா. | 3. வண்ணார் (சலவைத் தொழிலாளர்). |

பட்டியல் நான்கு.

குற்றப் பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர்.

| வரிசை எண், | சமூகத்தின் பெயர். | காணப்படும் தலையாய இடங்களும் மாவட்டங்களும். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | ஆத்தூர் கீழ்நாடு குறவர்கள். | சேலம், தென் ஆற்காடு மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள். |
| 2. | ஆத்தூர் மேல்நாடு குறவர்கள். | சேலம் மாவட்டம். |
| 3. | அப்பநாடு கொண்டயம், கோட்டை மறவர். | இராமநாதபுரம் மற்றும் மதுரை மாவட்டங்கள். |
| 4. | அம்பலக்காரர் .. | தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள். |
| 5. | அம்பலக்காரர் .. | சூரியனூர். |
| 6. | போயர்கள் .. | திருச்சிராப்பள்ளி, நீலகிரி, சேலம், தர்புரி மாவட்டங்கள். |
| 7. | பட்டு துர்க்கர்கள் .. | .... |

| வரிசை எண். | சமூகத்தின் பெயர். | காணப்படும் தலையாய இடங்களும் மாவட்டங்களும். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 8. | சி. கே. குறவர்கள் .. | தென் ஆற்காடு மாவட்டம். |
| 9. | சக்கலா .. | இராமநாதபுரம், தஞ்சாவூர், திருச்சி மதுரை மற்றும் நீலகிரி மாவட்டங்கள். |
| 10. | சங்கயமபுடி குறவர்கள் .. | வட ஆற்காடு மாவட்டம். |
| 11. | செட்டிநாடு வலையர்கள் .. | இராமநாதபுரம் மாவட்டம். |
| 12. | டொம்மர்கள் .. | திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| 13. | தொப்ப குறவர்கள் .. | சேலம் மாவட்டம். |
| 14. | தொம்மர்கள் .. | தஞ்சாவூர் மற்றும் வட ஆற்காடு மாவட்டங்கள். |
| 15. | தொங்க போயர் .. | .... |
| 16. | தொங்க ஊர் கொராச்சர்கள். | .... |
| 17. | தேவகுடி தலையாரிகள் .. | .... |
| 18. | தொப்பை கொராச்சர்கள் .. | திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| 19. | டாபி குறவர்கள் .. | தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் வட ஆற்காடு மாவட்டங்கள். |
| 20. | தொங்க தாசரிகள் .. | செங்கல்பட்டு, திருச்சிராப்பள்ளி, சென்னை மற்றும் சேலம் மாவட்டங்கள். |
| 21. | கொரில்லா தொட்த போயர். | .... |
| 22. | கூடு தாசரிகள் .. | .... |
| 23. | கந்தர்வக்கோட்டை குறவர்கள். | தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் தென்னாற்காடு மாவட்டங்கள். |
| 24. | கந்தர்வக்கோட்டை கள்ளர்கள். | தஞ்சாவூர் மாவட்டம். |
| 25. | இஞ்சி குறவர்கள் .. | தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்கள். |
| 26. | ஜோகிகள் .. | செங்கல்பட்டு, சென்னை, தென் ஆற்காடு மற்றும் வட ஆற்காடு மாவட்டங்கள். |
| 27. | ஜாம்பவனோடை .. | இராமநாதபுரம், மதுரை, தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்கள். |
| 28. | காலாடிகள் .. | இராமநாதபுரம், மதுரை, தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்கள். |
| 29. | கல் ஒட்டர்கள் .. | செங்கல்பட்டு, இராமநாதபுரம், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் சேலம் மாவட்டங்கள். |
| 30. | குறவர்கள் .. | செங்கல்பட்டு, இராமநாதபுரம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சென்னை, மதுரை மற்றும் நீலகிரி மாவட்டங்கள். |
| 31. | கலிஞ்சி டாபி குறவர்கள் .. | தஞ்சாவூர் மாவட்டம். |
| 32. | கூட்டப்பல் கள்ளர்கள் .. | திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| 33. | காலா குறவர்கள் .. | தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்கள். |
| 34. | கால்வதிலா போயர்கள் .. | .... |
| 35. | கேப்மாரிகள் .. | செங்கற்பட்டு மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்கள், |
| 36. | மறவர்கள் .. | தஞ்சாவூர், இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி மாவடடங்கள். |
| 37. | மொண்ட குறவர்கள் .. | .... |
| 38. | மொண்ட கொல்லா .. | சேலம் மாவட்டம். |
| 39. | முட்லகாம்பட்டி .. | திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| 40. | நோக்கர்கள் .. | திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| 41. | நெல்லூர்பேட்டை ஒட்டர்கள். | வட ஆற்காடு மாவட்டம். |

| வரிசை எண். | சமூகத்தின் பெயர். | காணப்படும் தலையாய இடங்களும் மாவட்டங்களும். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 42. | ஒட்டர்கள் .. | தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை மாவட்டங்கள். |
| 43. | பெத்த போயர்கள் .. | திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| 44. | பொன்னை குறவர்கள் .. | வட ஆற்காடு மாவட்டம். |
| 45. | பிறமலைக்கள்ளர்கள் .. | இராமநாதபுரம், மதுரை மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்கள். |
| 46. | பெரலா சினியூர் கள்ளர்கள் .. | திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| 47. | படையாச்சிகள் .. | தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள வெள்ளையன்குப்பம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள தென்னூர். |
| 48. | புன்னான் வேட்டுவக் கவுண்டர் | திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| 49. | சேர்வைகள் .. | திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| 50. | சேலம் மேல்நாடு குறவர்கள்.. | மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் வட ஆற்காடு மாவட்டங்கள். |
| 51. | சேலம் உப்பு குறவர்கள் .. | சேலம் மாவட்டம். |
| 52. | சக்கரைதாமடை குறவர்கள் | வட ஆற்காடு மாவட்டம். |
| 53. | சாரங்கபள்ளி குறவர்கள் . | .... |
| 54. | சூரமாரி ஒட்டர்கள் . | சேலம் மாவட்டம். |
| 55. | செம்பநாடு மறவர்கள் . | இராமநாதபுரம் மாவட்டம். |
| 56. | தல்லி குறவர்கள் . | சேலம் மாவட்டம். |
| 57. | தெலுங்கபட்டி செட்டிகள் | திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| 58. | தொட்டிய நாயக்கர்கள் . | செங்கல்பட்டு, இராமநாதபுரம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம், வட ஆற்காடு மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்கள். |
| 59. | தோகமலை குறவர்கள் அல்லது கேப்மாரிகள். | திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| 60. | உப்புக் குறவர்கள் அல்லது செட்டிப்பள்ளி குறவர்கள். | தஞ்சாவூர், மதுரை மற்றும் வட ஆற்காடு மாவட்டம். |
| 61. | ஊரளி கவுண்டர்கள் . | திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| 62. | வயல்பாடி அல்லது நாவல் பேட்டை கொராச்சர்கள். | .... |
| 63. | வடுவார்பட்டி கொரவர்கள் | மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்கள். |
| 64. | வலையர்கள் . | மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்கள். |
| 65. | வேங்கனூர் ஆதி திராவிடர்கள் | வட ஆற்காடு மாவட்டம். |
| 66. | வேப்பூர் பறையர்கள் . | தென் ஆற்காடு மாவட்டம். |
| 67. | வேட்டைக்காரர்கள் . | தஞ்சாவூர் மாவட்டம். |
| 68. | வேட்டைக் குறவர்கள் . | சேலம் மாவட்டம். |
| 69. | வரகனேரி குறவர்கள் . | திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| 70. | வேட்டுவக் கவுண்டர்கள் . | திருச்சிராப்பள்ளி மாவட்டம். |

குறிப்பு.—பிற்பட்டோர் நலத் துறையால் வழங்கப்படும் சலுகைகளைப் பெற தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் குற்றப் பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட சமூகத்தினராகக் குறிப்பிடப்பட்டுள்ள சமூகத்தினர் புதுக்கோட்டை மாவட்டத்திலும் குற்றப் பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட சமூகத்தினராகக் கருதப்பட வேண்டும்.

தமிழ்நாடு அரசு அ[illegible]கம், சென்னை–600 079